

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கத்தில் 4,320 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் ஆகியோர் வழங்கினர். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மகளிர் திட்டம் திட்ட அலுவலர் மதுரா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, மேற்கு மண்டல குழுதலைவர் தெய்வயானை தமிழ்மறை, பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன், மாமன்ற உறுப்பினர் சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் படைவீடு, இந்தியா சிமெண்ட்ஸ் தொ.மு.ச. தலைவர் பி.செல்லதுரை மற்றும் நாமக்கல் மாவட்ட முன்னாள் தி.மு.க. துணைச் செயலாளர் திருமதி பூங்கோதை செல்லதுரையின் மகன் பூ செ மதன் முரசொலிக்கும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் வாழும் ஜார்ஜோ திருமதி ஜிசப்பினா பெல்பொரியோ ஆகியோரின் மகள் ரேபேகா பெல்பெரியோவிற்கும் ஆஸ்திரேலியாவில் திருமணம் நடந்த நிலையில் நாமக்கல் மோகனூர் சாலை தோப்பூர் கொங்கு திருமண மாளிகையில் தம்பதியர் விழா நடைபெற்றது. விழாவில் தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மதிவேந்தன் கலந்து கொண்டு வாழ்த்து கூறினார். சென்னை லஷ்மன் சுருதி இசை நிகழ்ச்சியுடன் விமரிசையாக நடந்த விழாவில் கழகத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வெகு திரளாக கலந்து கொண்டார்கள். இறுதியாக கலந்து கொண்ட அனைவருக்கும் பூங்கோதை செல்லதுரை நன்றி கூறினார்.

### தென்றல் செல்வராஜ் தலைமை! நவநீதகிருஷ்ணன் – மணிமாறன் தென்றல் பங்கேற்பு!

# பொள்ளாச்சி 13வது வட்டத்தில் திராவிடப் பொங்கல் விழா - போட்டிகள்!

## கே.ஈஸ்வரசாமி எம்.பி. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்!

பொள்ளாச்சி. ஜன. 14-

பொள்ளாச்சி நகர 13வது வட்ட தி.மு.க. சார்பாக திராவிடப் பொங்கல் திருவிழா சமத்துவப் பொங்கல் வைக்கப்பட்டு பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சிகளுடன் பொள்ளாச்சி வள்ளியம்மா லேஅவுட் சுந்தர் விநாயகர் கோயில் அருகில் நடைபெற்றது.



கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு நகரக் கழகச் செயலாளர் இரா. நவநீதகிருஷ்ணன், பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் எம்.அமுத பாரதி, நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல், வட்டக் கழக செயலாளர் பூவை செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கலந்து கொண்டு பெண்களுக்கான இறுதிப் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்.

நகர மன்றத் தலைவர் ஷ்யாமளா நவநீதகிருஷ்ணன் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார்.

நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கவுதமன் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யை தலைமைக் கழக இளம் பேச்சாளர் சா.பூங்கொடி தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருதராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில்குமார், பாத்திமா அக்பர், கவிதா மணிகண்டன், உமா சிவகுமார், நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம்.வி. ஜெயக்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் மா.ஜெயச்சந்திரன், ஜெகதீஷ், போஜராஜன், முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, முன்னாள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் மலர் பாலு, பேங்க் விஜயகுமார், பொள்ளாச்சி நகர சிறுபான்மை அணி அமைப்பாளர் உசேன், நகர தகவல் தொழில் நுட்ப அணி விக்னேஷ் பிரபு, நகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் விக்னேஸ்வரன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பாலமுருகன், வட்ட பிரதிநிதிகள் லோகநாதன், லேத் சுப்பிரமணி, மணிகண்டன், ஜெயபிரகாஷ், ரஞ்சித், வழக்கறிஞர் சந்தோஷ், சார்பு அணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், தாஸ் பிரபு, சி.டி.சி. ஹரி ராஜா, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் விஜயா, முகேஷ் பாண்டியன், ஹரி பிரகாஷ், ஊத்துக்குளி அரவிந்த், சக்திவேல், லேத் செல்வராஜ், அங்குமணி, பாலகேசன், கணேசன், சலூன் ஆனந்த், பெயிண்டர் ராஜேந்திரன், சபரி பாபு, ஹரி முரளி கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# நாமக்கல் மாவட்டத்தில் 742 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் – கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினர்!

நாமக்கல், ஜன. 14-

நாமக்கல் மாவட்டம் நாமக்கல் நகர் பகுதி மற்றும் ராசிபுரம் ஒன்றிய, நகர பகுதியில் உள்ள 742 பயனாளிகளுக்கு அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினர்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் த லை வ ரு ம ா ன மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் நாமக்கல் மாவட்டம் நாமக்கல் நகர் பகுதி மற்றும் ராசிபுரம் ஒன்றிய, நகர பகுதியில் பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு நகரப் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்கு ஒருமுறை வரன்முறைபடுத்தும் திட்டத்தின் கீழ் நாமக்கல் நகர் பகுதியில் 546 பயனாளிகளுக்கும் இராசிபுரத்தில் 196 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 742 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநகராட்சி மேயர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், துணை மேயர் செ.பூபதி, நகர கழக செயலாளர்கள் ராணா ஆனந்த், அ.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர். எம்.துரைசாமி, நகர கழக செயலாளர் என்ஆர்.சங்கர், பேரூர் கழக செயலாளர்கள் என்.செல்வராஜ், பி.ஜெயக்குமார், சார்பு அணி அமைப்பாளர் சிவக்குமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சமத்துவப் பொங்கல் கொண்டாடுவது, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது குறித்தான ஆலோசனைக் கூட்டம் கோவை வடக்கு மாவட்டம், துடியலூரில் அமைந்துள்ள கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கொடுமுடி – பிலிக்கல்பாளையம் காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் தொடர்பாக,

# தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க. மக்களை திசை திருப்புகிறது!

## அ.தி.மு.க.வைக் கண்டித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி கண்டனம்!

நாமக்கல், ஜன.14-

ஈரோடு மாவட்டம் கொடுமுடி - நாமக்கல் மாவட்டம் பிலிக்கல்பாளையம் காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைப்பது தொடர்பாக, தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க. மக்களை திசை திருப்பு வதாக நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுக்கா பிலிக்கல்பாளையத்திலிருந்து கொடுமுடிக்கு காவிரியின் குறுக்கே பாலம் அமைக்க தமிழ்நாடு சட்டப் பேரவையில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அறிவிப்பு வெளியிட்டும் திமுக அரசு அதனை கிடப்பில் போட்டுள்ளதாக கூறி கடந்த 4 ந் தேதி ஞாயிற்றுக் கிழமை முன்னாள் அமைச்சர் தங்கமணி தலைமையில் அதிமுகவினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதற்குப் பதில் அளிக்க நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, கபிலர்மலை ஒன்றியம் பிலிக்கல்பாளையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில்,

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பரமத்திவேலூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் (கே.எஸ். மூர்த்தி) கடந்த 2017 ஜுன் மாதத்தில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில், காவிரி ஆற்றின் குறுக்கே பிலிக்கலபாளையதையும் கொடுமுடி ஆவுடையார் பாறை பகுதியையும் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே போக்குவரத்து பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அவ்வாறு பாலம் அமைக்கும் பட்சத்தில் ஈரோடு, கோவை, திருப்பூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்ககளுக்கு வசதியாக இருக்கும். எனவே காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

இதையடுத்து அப்போது அ.தி.மு.க. அரசின் முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி, பட்ஜெட் கூட்டத்தொடரில் 110 விதியின் கீழ் பாலம் அமைக்க அறிவிப்பு செய்து நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. பாலம் அமைக்க ரூ.32.50 லட்சம் மதிப்பில் அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான நில எடுப்பு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. தொடர்ந்து நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்ட வருவாய் துறை மூலம் நிலங்களை கையகப்படுத்த நிலத் திட்ட அட்டவணை அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்ட நிலையில் தொடர்ந்து பணிகள் நடக்காமல் கிடப்பில் போடப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டு கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலுவிடம் விவசாயிகளின் நலன் காக்கவும், கோவை, ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களின் மக்களின் வசதிக்காகவும் ஈரோடு மாவட்டம் கொடுமுடி மற்றும் நாமக்கல் மாவட்டம் பிலிக்கல்பாளையம் பகுதியை இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைத்து, மின்வாரியத் துறை மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் வகையில் திட்டமிடப்பட்டது.

இதற்காக தற்போது நில எடுப்பிற்கு திருத்திய நில கையக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சென்னை நில எடுப்பு திட்ட அட்டவணை சரிபார்க்கப்பட்டு பரிந்துரைக்கு பின்னர், அரசுக்கு ரூ 19.40 கோடிக்கு நில எடுப்பிற்கான நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளது.

காவிரி ஆற்றின் குறுக்கே நெடுஞ்சாலை துறை மூலம் முன்மொழியப்பட்டுள்ள இந்த உயர்மட்ட பாலப்பணியுடன் தமிழ்நாடு மின்வாரியத் துறையின் நீர்மின் திட்டத்தை இணைத்து செயலாக்கம் செய்ததில் நில எடுப்பு மற்றும் திட்ட மதிப்பீட்டில் மாறுதல்கள் ஏற்படக்கூடிய வகையில் உள்ளதால் தற்போது நில எடுப்பிற்கான அரசாணை வழங்குவது ஒத்தி வைக்க வேண்டி தலைமை பொறியாளருக்கு தமிழ்நாடு அரசு பரிந்துரையும் செய்துள்ளது.

இந்நிலையில் நில எடுப்பு மற்றும் பாலம் கட்டுமானப் பணி தொகை போன்றவற்றை தமிழ்நாடு மின்வாரியத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ள நீர் மின் திட்டத்துடன் இணைத்து செய்ய வலியுறுத்தியும் மேற்கண்ட மின் வாரியத்துறை தலைமை பொறியாளரால் தமிழ்நாடு அரசுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த ஈரோடு மாவட்டம் கொடுமுடி மற்றும் நாமக்கல் மாவட்டம் பிலிக்கல்பாளையத்தை இணைக்கும் உயர் மட்ட பாலம் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிடர் மாடல் ஆட்சியில் துரிதப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் தங்கமணி தலைமையில், பரமத்திவேலூர் சட்ட மன்ற உறுப்பினர் சேகர் ஆகியோர் அதிமுக ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் எனவும், அதனை திமுக அரசு கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனவும் கூறியும், இத்திட்டத்தை நிறைவேற்றாத தமிழ்நாடு அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி சட்ட மன்ற தேர்தலை கருத்தில் கொண்டு மக்களை திசை திருப்பி வருகின்றனர். மக்களை ஏமாற்றி வரும் அதிமுகவை நாமக்கல் மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சியின் போது கபிலர்மலை தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் சாமிநாதன், மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் வக்கீல் சரவணகுமார், வடக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் தளபதி சுப்பிரமணியம், பொத்தனூர் பேரூர் கழக செயலாளர் கருணாநிதி, வெங்கரைப் பேரூர் கழக செயலாளர் இராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நவலடி ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய ,பேரூர்,கிளைக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணி பொறுப்பாளர்கள் ,மகளிர் அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தொண்டாமுத்தூர், தாளியூர், வேடபட்டி பேரூராட்சிகளில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்களை கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் பேரூர்க் கழக செயலாளர்கள், தலைவர்கள், வார்டு கழக செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.